முருகப்பெருமான் துணை

**மகான் சடைய நாயனார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

25.02.2023, சனிக்கிழமை

1. அவதார ஞான குரு அரங்கா
   அனுகூலம் ஞான வழி தந்து
   அவனியை காத்திட அருளுகின்ற
   அரங்கனே உன் பெருமைகூறி
2. கூறியே சுபகிருது சால் திங்கள்
   குறைவிலா முன்னான்கோர் திகதி காரி வாரம்
   (சுபகிருது வருடம் மாசி மாதம் 13 ம் நாள், 25.02.2023 சனிக்கிழமை)
   தெரிவிப்பேன் அனுகூல ஆசி
   தேசிகனுக்கு சடைய நாயனார் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
   உயிர்கொலை நீக்கித் தயவாய்
   ஞானம் பயிலும் மக்களே
   ஞானிகள் ஆவர் என்பேன்
4. என்கவே அரங்கன் காட்டும்
   இணையிலா சான்மார்க்கமெனும்
   நன்மை வழிகளை ஏற்று
   நானிலத்தில் மக்கள் தொடர்ந்து வர
5. வருகவே மாற்றம் தானாக
   வள்ளல் அருளாகக் கூடி
   தரும சிந்தை கொண்டுமே
   தயவானவர்களாகத் தேறுவர்
6. தேறவே உலகம் எங்கிலும்
   தொண்டர்படைகளாகத் தேசிகனுக்கு
   அரணாகப் பெருகி இனிதே
   அகிலமெல்லாம் ஞானவான்கள்
7. ஞானவான்கள் வழிநடத்துகின்ற
   ஞானத் தலைமைகள் உருவாகி
   தான தரும வழிமுறைகளுடன்
   தயவான ஆட்சியாகவும் மாறும்
8. மாறுதலை செய்யும் சக்தியாக
   மகானாக அரங்கன் சேவை
   ஆறுதலாக உலகினில் பரவி
   ஆகாத தீவினைகள் அனைத்தும்
9. அனைத்தும் அழியும் ஒழியும்
   ஆபத்தான ஆளுமையும் கூட
   அனைத்து சோடைகள் அனுகி
   அகற்றியே புதுமை படைக்கநேரும்

10. நேருமை ஞானவான்கட்கே
    நிலவுலகை ஆளும் தகுதியாக
    வருமுலகில் மாற்றம் கண்டு
    வந்தடையும் சடுதி ஞான ஆட்சி
11. ஆட்சிபெற்ற காலம் தொட்டு
    ஆறுமுகனார் தலைமையாக
    மாட்சிமைபட மண்ணுலகே பாதுகாப்பு
    மகான்கள் நிறைந்த வண்ணம் காணும்
    அனுகூல ஆசி முற்றே

–சுபம்–